# 19
# அல்குர்ஆனை ஓதுவோம் (ஸூறாக்கள் - 2)



## ஸூறதுல் இஹ்லாஸ் - ஸூறதுல் பலக் - ஸூறதுன் நாஸ்

இவை அல் குர்ஆனில் இறுதியாக அமைந்துள்ள 03 ஸூறாக்களாகும். இவற்றை ஓதுவதனால் அதிக நன்மைகள் கிடைக்கின்றன. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் இந்த ஸூராக்களை ஓதும்படி பணித்துள்ளார்கள். இவை காலையிலும் மாலையிலும், அநேக ஸுன்னத்துத் தொழுகையின் பின்னரும் ஓதப்படுகின்ற ஸூறாக்களாகும். 'நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒவ்வொருநாள் இரவும் தூங்கச்செல்லும் போது இம் மூன்று

ஸூறாக்களையும் மூன்று முறை ஓதி தனது இரு உள்ளங் கைகளிற்கும் ஊதி தனது முழு உடம்பிலும் தேய்ப்பார்கள்' (புகாரி) என ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள், 'இந்த இரவு இறங்கப்பட்ட வசனங்களைப் போன்ற வசனங்கள் இதற்கு முன் இறங்கியதை நான் காணவில்லை. அதுதான் ஸூறதுல் இஹ்லாஸ், ஸூறதுல் பலக், ஸூறதுல் நாஸ் என்பனவாகும்'.

## ஸூறதுல் இஹ்லாஸ்

ஸூறதுல் இஹ்லாஸ் அல்குர்ஆனில் அமைந்துள்ள 112 வது ஸூறாவாகும். இது நான்கு ஆயத்துக்களைக் கொண்ட மிகச் சிறிய ஸூறாவாகும். இது மக்காவில் இறங்கப்பட்ட மக்கீ ஸூறாவாகும். இந்த ஸூரா அல்லாஹ் ஒருவன் என்பதையும் அவன்தான் உண்மையான இறைவன் என்பதையும் வலியுறுத்துகின்றது. இதனால் இதற்கு 'ஸூரத்துல் அஹத்', 'ஸூறதுத் தௌஹீத்' என்ற பெயர்களும் உண்டு. இஹ்லாஸ் என்ற அரபுச் சொல்லின் கருத்து தூய்மை என்பதாகும். அல்லாஹ் சகல ஷிர்க்குகளில் இருந்தும் பரிசுத்தமானவன். அவனுக்கு தாய், தந்தை, பிள்ளைகள் மற்றும் சகோதர சகோதரிகள் என்று யாரும் கிடையாது. அதே போன்று யாரிடமும் எந்தத் தேவையும் அல்லாஹ்வுக்கு கிடையாது என்றும் இந்த ஸூரா சுருக்கமாக விளக்குகின்றது.

மக்காவில் வாழ்ந்த காபிர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து 'நீங்கள் கூறும் இறைவன் எப்படிப்பட்டவன்? என்று வினவினர். அதற்கு பதிலளிப்பதற்காகவே இந்த ஸூறா இறக்கியருளப் பட்டது' (திர்மிதி). 'அல் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்கு இந்த ஸூறா சமமானது' (புஹாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

## ஸூறாவும் அதன் பொருளும்




*அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.*

1. *(நபியே மனிதர்களை நோக்கி) நீர் கூறும், அல்லாஹ் ஒருவன் தான்.*

2. *(அந்த) அல்லாஹ் (எவ்விதத் தேவையுமற்றவன்). (யாவும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன)*

3. *அவன் (எவரையும்) பெறவுமில்லை (எவராலும்) பெறப்படவுமில்லை. (ஆகவே அவனுக்குத் தகப்பனுமில்லை, சந்ததியுமில்லை)*

4. *தவிர அவனுக்கு ஒப்பாகவும் ஒன்றுமில்லை.*

## ஸூறதுல் பலக்

*ஸூறதுல் பலக் அல் குர்ஆனில் அமைந்துள்ள 113 வது ஸூறாவாகும்.இது 05 வசனங்களைக் கொண்ட மக்கீ ஸூறாவாகும். 'பலக்' எனும் அறபுச் சொல்லின் கருத்து அதிகாலை என்பதாகும். இந்த ஸூறா இருளின் கேடு களில் இருந்தும் பொறாமைக்காரர் சூனியக்காரர்களின் தீங்குகளில் நின்றும் பாதுகாப்பு தேடும் வகையில் உள்ளது.*

## ஸூறாவும் அதன் பொருளும்




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே நீர் பிராத்தனை செய்து) கூறுவீராக வைகறையின் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.

2. அவன் படைத்திருப்பவைகளின் தீங்கைவிட்டும்.

3. மேலும் (யாவையும்) மறைத்துக்கொள்ளப் படரும் இருளின் தீங்கைவிட்டும்.

4. மேலும் முடிச்சுப் போட்டு ஊதும் (சூதுக்காரப்) பெண்களின் தீங்கைவிட்டும்.

5. பொறாமைக்காரன் பொறாமைப்படும் போது நேரும் தீங்கைவிட்டும் (இரட்சிக்கக் கோருகின்றேன்).

## ஸூறதுன் நாஸ்

ஸூறதுன் நாஸ் அல் குர்ஆனில் அமைந்துள்ள 114 வதும் இறுதியானதுமான ஸூறாவாகும். இது 06 வசனங்களைக் கொண்ட மக்கீ ஸூறாவாகும். நாஸ் எனும் அறபுச் சொல்லின் கருத்து 'மனிதர்கள்' என்பதாகும். இந்த ஸூறா தீங்கான மனிதர்கள், ஜின்கள் மற்றும் மனதில் தோன்றும் சந்தேகங்கள் என்பவற்றில் இருந்தும் பாதுகாப்புத் தேடும் வகையில் அமைந்துள்ளது.

### ஸூறாவும் அதன் பொருளும்




அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஓதுகின்றேன்.

1. (நபியே பிரார்த்தனை செய்து) நீர் கூறுவீராக மனிதர்களின் இறைவனிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன்.

2. (அவன் தான்) மனிதர்களின் (உண்மையான) அரசன்.

3. (அவனே) மனிதர்களின் (வணக்கத்துக்குரிய உண்மையான) இறைவன்.

4.-5. மனிதர்களுடைய இருதயங்களில் (வீணான) சந்தேகங்களை உண்டு பண்ணிவிட்டு மறைந்து கொள்ளும் விஷமிகளின் தீங்கைவிட்டும் (பாதுகாக்கக் கோருகின்றேன்.)

6. (அத்தகைய விஷமிகள்) ஜின்களிலுமிருக்கின்றனர். மனிதர்களிலுமிருக்கின்றனர்.

## பயிற்சி

1. இஹ்லாஸ் என்பதன் கருத்து யாது ?
2. ஸூறத்துல் இஹ்லாஸ் அல்குர்ஆனின் எத்தனையாவது ஸூறாவாகும் ?
3. ஸூறத்துல் இஹ்லாஸுக்கு வேறு இரு பெயர்களைத் தருக.
4. பலக் என்பதன் கருத்து யாது ?
5. ஸூறத்துல் பலக்கில் உள்ள வசனங்கள் எத்தனை?
6. நாஸ் என்பதன் கருத்து யாது ?
7. அல்குர்ஆனின் இறுதி ஸூறா எது ?

## செயற்பாடு

மேற்கூறப்பட்ட மூன்று ஸூறாக்களையும், அவற்றின் பொருளையும் மனனமிடுக.